

திருவள்ளூர் மத்திய மாவட்ட பொறியாளர் அணி சார்பில் இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு நடுக்குத்தகை ஊராட்சியில் உள்ள பகல் நேரம் முதியோர் இல்லத்தில் மாவட்ட அமைப்பாளர் பொறியாளர் எம்.மோகன் ஏற்பாட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் 200 முதியோர்களுக்கு காலனிகள் அரிசி பிரட் பால் அறுசுவை உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கே.ஜெ.ரமேஷ், ஜி.விமல்வர்ஷன், கே.சுரேஷ் குமார், ஆர்.செந்தாமரை, யமுனா ரமேஷ், என். லட்சுமி, ஹரிபாபு, இ.என்.சந்திரன், உதயா, சாந்தகுமாரி மற்றும் பலர் உள்ளனர்.



சென்னை, நுங்கம்பாக்கம், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நலவாரிய கருத்தரங்கு கூட்ட அரங்கில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில், தொழிலாளர் துறை அலுவலர்களின் பணி திறனாய்வுக் கூட்டம் நேற்று (17.12.2025) நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் தலைவர் பொன் குமார், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அரசு செயலாளர் கொ.வீர ராகவ ராவ், ஆணையர் சி.அ.ராமன், தொழிலாளர் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றியச் செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமையில்

# சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம்!

## மாதவரம் எஸ்,சுதர்சனம் – முனைவர் சபாபதி மோகன் – சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

சென்னை, டிச. 16-

சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காரணோடை பஜார் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணகாரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர், மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஏழைய எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கொள்கை பரப்பு செயலாளரும் தலைமை கழக பேச்சாளரு மான முனைவர் இரா.சபாபதி மோகன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

உடன் ஒன்றிய நிர்வாகிகள் ப.சீனிவாசன், இரா. விஜயன், செ.அரசு, பா. சேகர். நா.பரசுராமன், வி.ஞானம், எம்.ஜி.கார்த்திக், இரா.கிருஷ்ண மூர்த்தி, ஜாகிர் உசேன், ஏ.கே.செல்வகுமார், டி. எம்.கிருஷ்ணன், பிரேம். ரமேஷ்குமார், எஸ்.சரஸ்வதி, சுகவேணி முருகன், என்.விஜய், ஆர்.சி.சிவசங்கரன், எம்.எஸ்.மணிகண்டன், க.பிரபு, பி.வி.எத்திராஜ், எஸ்பி.குமார் மற்றும் முன்னால் ஊராட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், கிளை நிர்வாகிகள், கலந்து கொண்டனர். சோ.தெ.ஒ.இ.அமைப்பாளர் எம்.ஜெகன், மாணவ அணி அமைப்பாளர் ஏ. கே.கௌதம் ஆகியோர் நன்றி உரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியை ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜி. ஆர்.பத்மநாபன் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளரும் தமிழக துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காரனோடை பஜார் அருகில் மாபெரும் பொதுக்கூட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணகாரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர், மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஏழைய எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கொள்கை பரப்பு செயலாளரும் தலைமை கழக பேச்சாளருமான முனைவர் இரா. சபாபதி மோகன் மற்றும் தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இந்நிகழ்ச்சியை ஒன்றிய விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜி.ஆர்.பத்மநாபன் அவர்கள் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

### சோழிங்கநல்லூர் தொகுதி – 189வது வட்டத்தில்

# என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனைக் கூட்டம்!

## எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்!

சென்னை, டிச. 18-

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 189-வது வட்டத்தில் 16/12/2025 அன்று 92,93,94,95 மற்றும் 96 ஆம் பாகங்களில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடியின்” செயல்பாடுகளின் ஆலோசனைக் கூட்டத்தில், BLA-2 பாக நிலை முகவர்கள் அவரவர் வாக்குச்சாவடியை வெற்றி வாக்குச்சாவடியாக மாற்றுவதன் மூலமே நம் இலக்கை அடைய முடியும். வாக்கு சாவடியை வெற்றி வாக்குச் சாவடியாக மாற்றுவது எவ்வாறு என்பதற்கான வழிமுறைகளை அவரவர் பாகங்களில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட 100 குடும்பங்களை நேரில் சந்தித்து கழக ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து பொது மக்களின் தேவைகளும், கோரிக்கைகளையும் பெற்று அதை நிறைவேற்றும் விதமாக பணியாற்றிட வேண்டுமென சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில், பகுதி கழக துணை செயலாளர் வி.தனசேகரன், பகுதி பொருளாளர் கே.டி.ரவி வட்ட செயலாளர் வி. பாபு,மாவட்ட பிரதிநிதி கே.தேவேந்திரன் பி.கே தங்கம் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



சோழிங்கநல்லூர் மத்திய பகுதி 189–வது வட்டத்தில் 92,93,94,95 மற்றும் 96 ஆம் பாகங்களில் ”என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச் சாவடியின் செயல்பாடுகளின் ஆலோசனைக் கூட்டத்தில் எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். இந்நிகழ்வில், பகுதி கழக துணை செயலாளர் வி.தனசேகரன், பகுதி பொருளாளர் கே.டி.ரவி வட்ட செயலாளர் வி.பாபு, மாவட்ட பிரதிநிதி கே.தேவேந்திரன், பி.கே.தங்கம் உள்ளிட்ட பாக நிலை முகவர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.


